




# பரத நாட்டிய அரங்கேற்றம்

ஜூலை 2015 12ஆம் திகதி

ஞாயிற்றுக்கிழமை

**ஸ்ரீமதி சிந்துஜா தர்சன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவையூர் குமரநர்த்தனாலய அதிபர்
"நிருத்தியவேந்தன்" திருவாளர் நடராசா குமரவேள் அவர்களின் மாணவியும்
திரு. திருமதி சிவசுப்பிரமணியம் ஸ்ரீரயனி தம்பதிகளின் ஏக புதல்வியும்,
திருவாளர் தர்சன் அவர்களின் மனைவியுமாகிய
ஸ்ரீமதி சிந்துஜா தர்சன் அவர்களின்



# பரத நாட்டிய அரங்கேற்றம்

தலைமை :

**கலாநிதி ஆறு.திருமுருகன்**

தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை,

பிரதம விருந்தினர்

பேராசிரியர் **க.தேவராஜா**

தலைவர், வணிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்

சிறப்பு விருந்தினர்

பேராசிரியர் **வ.மகேஸ்வரன்**

தலைவர், தமிழ்த்துறை,
பேராதனை பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விசேட விருந்தினர்

"கலைமாமணி தஞ்சை" அ. நடராஜன்
முதல்வர், அரசு இசைக்கல்லூரி, சென்னை – 28.

கௌரவ விருந்தினர்கள்

"கலாபூசணம்" "நாட்டியவாரிதி"
ஸ்ரீமதி லீலாம்பிகை செல்வராஜா
அதிபர் "கலைக் கோயில்" மானிப்பாய்

"கலாகீர்த்தி" ஸ்ரீமதி. சாந்தினி சிவநேசன்
ஓய்வு நிலை விரிவுரையாளர், ஆசிரிய கலாசாலை, கோப்பாய்.

"கலாபூசணம்" ஸ்ரீமதி. பத்மினி செல்வேந்திரகுமார்
ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் (யாழ்வலயம்)

"நாட்டியக் கலைமணி" ஸ்ரீமதி. யசோதரா விவேகானந்தன்
அதிபர் திலகநர்த்தனாலயம்

"பரதகலாவித்தகர்" ஸ்ரீமதி. நந்தினி சிவராஜன்
பிரதி அதிபர் யா / இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நடன அரங்கில்

| உருப்படிகள் | இராகம் | தாளம் |
|---|---|---|
| புஸ்பாஞ்சலி | சரஸ்வதி | ஆதி |
| அலாரிப்பு | நாட்டை | கண்டசாபு |
| ஜதீஸ்வரம் | ஹிந்தோளம் | ஆதி |
| கௌத்வம் | கௌளை | ஆதி |
| வர்ணம் | கௌரி மனோகரி | ஆதி |
| பதம் | பெஹாக் | ஆதி |
| கீர்த்தனம் | சுபபந்துவராளி | ஆதி |
| காவடி சிந்து | செஞ்சுருட்டி | ஆதி |
| தில்லானா | ஜெனசம்போதினி | ஆதி |
| மங்களம் | மத்தியமாவதி | ஆதி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணி செய் கலைஞர்கள்

நாட்டியமைப்பு : நிருத்திய வேந்தன் திருவாளர் நடராசா குமரவேள் நட்டுவாங்கம்



பாட்டு : தவமைந்தன் தவநாதன் றொபேட் யாழ் பல்கலைக்கழக இசைதுறையின் முழுநிலை விரிவுரையாளர்



மிருதங்கம் : கணபதிப்பிள்ளை கஜன் மிருதங்க கலாவித்தகர், நுண்கலைமாணியாழ் பல்கலைக்கழக நடனத்துறை மிருதங்க விரிவுரையாளர்



வயலின் : திரு. அம்பலவாணன் ஜெயராமன் சுருதி வேந்தன், இசைஞான சுரபி



புல்லாங்குழல் : திரு.குணராசா நக்கீரன் இசைஞானி, யாழ்மாவட்ட சுகாதார அதிகாரி, யாழ் போதனா வைத்தியசாலை



வீணை : வீணை வித்துவான் ப்ரம்மஸ்ரீ ம.சோமசுந்தர சர்மா



தவில் நாதஸ்வரம் : நாதஸ்வர வித்துவான் ஈஸ்வர ஞான சாகீத்ய இசை அரசு N.R.கோவிந்தசாமி புதல்வன்N.R.K.இரத்தின குமார் குழுவினர் இணுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அருள் ஆசிச்செய்தி கலாரசிகப் பெருமக்களுக்கு



இன்று பரதநாட்டிய அரங்கில் அரங்கேற்றம் சிந்துஜாதர்சன் முறையாக பரதநாட்டியம் பதினாறு பல துறைகளிலும் எழச்சியடைந்து வட இலங்கை சந்ததியினர் சபையில் ஆசிரியர் தளத்தை பயின்று பரதக் கலையில் தனக்கென ஒரு இடத்தை வகுத்துக்கொண்டது மனமகிழ்ச்சி தருகின்றது பரதக்கலையை இறைவனால் படைக்கப்பெற்ற அற்புதமாகும். இதை ஆடுபவரும் பார்த்து ரசிப்பவரும் ஒருமுகப்படுவது இக்கலையின் சிறப்பாகும். பரதக்கலை பாவராக தாளத்தை ஆடுபவனுடைய முகத்தில் பாவத்தையும் உடம்பில் பாகத்தையும் காலில் தாளத்தையும் ஏற்படுத்தீ செயல்படுவது பரதக்கலையாகும். பரதக்கலையை பயின்று அரங்கேறும் சிந்துஜா குருவுக்கும் இறைவனுக்கும் சமர்ப்பணம் செய்வது அரங்கேற்றமாகும். இதை பயிற்று வித்த குருவையும் பெற்றோரையும் வாழ்த்துகின்றோம். சிந்துஜா தர்ஷன் இன்னும் பல கலைகளை பெற்று இறை இன்பம் பெற ப்ராத்திக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிகள்**

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**

**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருவருள் துணை



இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோவிலடியை சேர்ந்த திரு.திருமதி. சிவசுப்பிரமணியம் ஸ்ரீரயனி தம்பதிகளின் புதல்வி ஸ்ரீமதி சிந்துஜா தர்சன் அவர்களின் நடன அரங்கேற்றம் சிறப்புற நடைபெற முதற்கண் ஆசி கூறுகின்றேன். "மஹா நடன சபாபதி" என்று சிவபெருமானுக்கு ஒரு விசேட பெயருண்டு . "நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதன்" என்று சிவபெருமானை மணிவாசக சுவாமிகள் சிவபுராணத்தில் குறிப்பிடுகிறார். பரத நாட்டியத்திற்கு தலைவராக விளங்குபவனே சிவபெருமான், இறைபக்தி இக்கலைக்கு மிகமுக்கியம், சிறந்த சைவ பண்பாடோடு கூடிய குடும்பத்தில் பிறந்த சிந்துஜா அவர்கட்கு இக்கலை சித்தியெய்தியதற்கு அவரின் பெற்றோரின் சமயப்பற்றும் செய்வழிபாடுமே காரணம் சிறந்த நடன ஆசிரியர் நடராசா குமரவேள் இவருக்கு குருவாக அமைந்தது இவர் செய்த பாக்கியம். இவரது நடன அரங்கேற்றம் சிறப்புற நடைபெற ஸ்ரீ சிவகாமி அம்பாளின் திருவருள் துணை நிற்பதாகுக.

**சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்**
**காயத்ரீபீடம், தர்மசாஸ்தா குருகுலம்**
**ஸ்ரீ கண்ணகாபரமேஸ்வரி தேவ்யலயம்,**
இணுவில், சுன்னாகம்.



## ஆசியுரை



தில்லை கூத்தனே கைலங்கிரிவாசனே ஆடற்கலையின் அரனே போற்றி.

ஆய கலைகள் 64, அதனுள் நாட்டியக்கலை ஒன்று, இனமத மொழி பேதங்களுக்கு அப்பாற்பட்ட தன்மையினால் இக்கலையானது. இந்துமத பண்பாடு கலாச்சாரங்களுடன் இரண்டற கலந்திருக்கும் சிறப்பிற்குரியது என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்துக் கடவுளரின் ஒவ்வொரு திருமேனியிலும் பொதிந்துள்ள ஆடல் அபிநயத் தோற்றங்களை காட்டலாம்.



இந்த கணனி உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஸ்ரீமதி சிந்துஜா தர்சன் தன்னை ஆடற்கலைக்காக அர்ப்பணித்து நாட்டியக்கலையை தனது குருவினூடாக முறைப்படி பயின்று அரங்கேற்றம் காணுவதையிட்டும். இவர் சகல செல்வங்களும் பெற வாழ்த்துவதோடு இக்கலைப்பணி மென்மேலும் வளர வேண்டுமென எல்லாம் வல்ல இணுவில் சிவகாமி அம்மன் அருள் சுரக்க பிராத்திக்கின்றேன்.

**சிவஸ்ரீ.சாம்பசிவ சோமசபேசக் குருக்கள்**
**பிரதம சிவாச்சார்யர்**
**சிவகாமி அம்மன் கோவில்,** இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தலைவரின் ஆசிச்செய்தி



பரதக்கலை பாரம்பரியமான தெய்வீகக்கலையாகும் ஆடல் அரசன் அம்பலவாணர் படைத்த அற்புதக்கலை என்றால் மிகையாகது. இப்பிரபஞ்ச இயக்கத்தின் தத்துவத்தை உணர்த்தும் கலைவடிவமே நடனம் என்பதை அனைவரும் உணர்வர். இக்கலையை கற்றவர்கள் பாக்கியசாலிகள். திரிகரணசுத்தி, காரியசித்தி என்பார்கள். இக்கலை உடலையும் உள்ளத்தையும் ஒருங்கிணைத்து பாவங்களினால் வெளிப்படுத்தப்படும் அற்புத கலைவடிவம். இக்கலையை மானசீகமாக கற்றவர் இணுவையூர் திருவாளர் நடராசா குமரவேள் அவர்கள், கலைச்செல்வன் ஏரம்புசுப்பையா, மஹாவித்துவான் வீரமணி ஐயர் போன்ற நடனவித்தகர்களைப் பெற்ற இம்மண் இன்று, இளங்கலைஞர் குமரவேள் அவர்களையும் பெற்றிருப்பது பேறாகும். இக்கலைஞரின் மாணவி சிந்துஜா அவர்கள் அரங்கேறுவது கண்டு மிகவும் ஆனந்தம் அடைகிறேன். இணுவில் திரு.திருமதி. சிவசுப்பிரமணியம் தம்பதிகளின் ஏகபுத்திரியும் இளவல் தர்சன் அவர்களின் துணைவியுமாகிய சிந்துஜா அவர்கள் பரதநிருத்தியார்ப்பணம் செய்வதோடு இக்கலையை தொடர்ந்து கற்று வளர்க்க வேண்டும் என நல்லாசி கூறுகிறேன். இணுவில் சிவகாமி அம்பாள் சமேத நடராஜ பெருமானின் திருவருளால் நடன அரங்கேற்றம் நன்முறையில் அமைய பிரார்த்திக்கிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்**
தலைவர்.
**ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,**
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



**பிரதம விருந்தினரின் வாழ்த்துச் செய்தி...**

இணுவில் திரு.திருமதி.சிவசுப்பிரமணியம் தம்பதிகளின் ஏகபுத்திரி செல்வி சிந்துஜா அவர்களின் பரத நாட்டிய அரங்கேற்றத்திற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் எல்லையில்லா மகிழ்ச்சியடைகின்றேன். மன உணர்வுகளை அழகாக வெளிப்படுத்தும் தெய்வீகக் கலையான பரதக்கலை ஆடற்கூத்தன் அம்பலவாணனுடன் தொடர்புபடுத்தப்படுவதாகும். இக்கலையின் சிறப்பு பற்றி சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்கள் வியாபித்துக் கூறுகின்றன. ஆலயக்கலை, அரசவைக் கலை என விளங்கி வந்த பரதக்கலை காலவோட்டத்தில் அரங்கலையாக மிளிரத் தொடங்கி இன்று மக்கள் எல்லோரும் விருப்பத்துடன் கற்கும் கலையாக மாற்றம் பெற்றுள்ளது. நடனக் கலையை கற்பதன் மூலம் ஒருவரது ஆளுமை வளர்ச்சிக்குத் தேவையான உடல் வலிமை, மனவுறுதி. தேகாரோக்கியம், சிந்திக்கும் ஆற்றல் என்பன கிடைப்பதனால் இன்று பெண்கள் மட்டுமன்றி ஆண்களும் விரும்பிக் கற்கும் ஒரு கலையாக, பரதக்கலை மாறி வருவதைக் காண முடிகிறது.



செல்வி சிந்துஜா சிவசுப்பிரமணியம் அவர்கள் இணுவையூர் குமர நர்த்தனாலயத்தின் மாணவியாக ஆசிரியர் திரு. நடராசா குமரவேள் அவர்களிடம் வரன்முறையாக பரதக்கலையை கற்று இன்று எங்கள் எல்லோர் முன்னிலையிலும் அதனை மேடையேற்றுவது எமக்கு பெருமையையும் மகிழ்ச்சியையும், தருகின்றது. திரு.குமரவேள் அவர்கள் பரதக்கலையின் நுணுக்கங்களை மிகச் சிறப்பாக கற்பிக்க கூடிய ஆசிரியர் என்பதனால் அவரிடம் பரதக்கலையைக் கற்கும் வாய்ப்பு செல்வி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிந்துஜாவிற்குக் கிடைத்தமை பெரும்பேறென்றே குறிப்பிடுதல் வேண்டும். இதன் காரணமாகவே வட இலங்கை சங்கீத சபையினால் நடாத்தப்பட்ட எல்லா பரீட்சைகளிலும் தனது திறமையை வெளிக்காட்டிய செல்வி. சிந்துஜா இன்று அதன் இறுதி பரீட்சையிலும் தேறி "பரதகலா வித்தகர்" என்ற பட்டத்தை தனதாக்கி கொண்டுள்ளார்.

செல்வி. சிந்துஜா சிவசுப்பிரமணியம் அவர்கள் நிருத்திய வேந்தன் திரு.குமரவேள் அவர்களினால் பயிற்றுவிக்கப்பட்ட மாணவி என்ற பெருமைக்குரியவர் மட்டுமன்றி தனது கலையாற்றலை இலங்கையில் மட்டுமின்றி வெளிநாட்டிலும் காண்பிக்கும் வாய்ப்பும் பெற்றிருக்கின்றார். அவர் செல்வியாகக் கலை பயின்று இன்று சிந்துஜா தர்சன் என்று திருமதியாக அரங்கேறுவது மகிழ்ச்சிக்குரியதாகும். மொத்தத்தில் சிந்துஜா தர்சன் அவர்களின் கலையார்வமும், பெற்றோரின் நீண்டநாள் கனவும் இன்று நிறைவேறுவது கண்டு எவரும் பெருமைகொள்ளாமல் இருக்க முடியாது. பரதநாட்டிய அரங்கேற்றத்தில் திருமதி சிந்துஜா தர்சன் அவர்கள் தனது திறமைகளை வெளிக்காட்டி பார்வையாளர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெறுவார் என்பதில் ஐயமில்லை. அவரை இந்நிலைக்கு உயர்த்திய பெற்றோர்கள் அவரை நன்கு பயிற்றுவித்த ஆசிரியர் திரு.குமரவேள் அவருக்கு உற்சாகமளிக்கும் கணவன் திரு. தர்சன் ஆகியோரை பாராட்டுவதுடன் எதிர்காலத்தில் பரதக்கலையின் நாயகியாக திருமதி. சிந்துஜா விளங்க இறைவனை வேண்டி எனது வாழ்த்தினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேராசிரியர் **க.தேவராஜா**
தலைவர் / வணிகத்துறை
யாழ்ப்பாண பல்கலைக் கழகம், இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரனின் வாழ்த்துச் செய்தி



தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் பல அவற்றுள் நாட்டியம் என்பது முதன்மையானது. அது கூத்த மரபிலிருந்து மேற்கிளம்பிச் சிறிது சிறிதாக மெருகேற்றப் பெற்றது. இந்திய உபகண்டச் சூழலில் ஆடற்கலைகள் அனைத்தையும் ஒன்றிணைத்து பரதக்கலை எனப் பரதமுனிவர் நாட்டியசாஸ்திரம் எழுதிய போது, கூத்தர் மரபும், பாணியும் உள்வாங்கப்பட்டது. இன்று ஆடற்கலையில் பரதம் என்பது இந்தியப்பண்பாட்டின் பொதுக் குறிப்பாக அமைந்து விட்டது.

பரதம் கூத்தப்பிரானாலேயே ஆடப்பட்டது என்பது இந்துப் பாரம்பரியம் வழிவந்த ஐதீகம் அதனால் தான் காரைக்காலம்மையார் இறைவன் திருவாலங்காட்டில் ஆடுமாநடமும் கண்டு அடியின் கீழ் இருந்ததாக அறிய முடிகின்றது. கூத்தப்பிரான் தில்லையம்பலத்தில் சிற்சபையில் நடனக் கோலம் கொண்டதனால் தில்லை நடராசரானார்.

இவ்வாறான நடனப் பாரம்பரியத்தைத் தொடர்பறாது வளர்த்து வந்த பெருமை தமிழ் நாட்டிற்குரியது. அரசுக்கும், தேவரடியாரும், நிறுவனங்களும் அதனை காலந்தோறும் வளர்த்தெடுத்தன். அதனைக் கலைத்துவமும் தெய்வீகமும் நிறைந்த அரங்காற்றுக் கலையாக நிகழ்த்திக் காட்டுவதில் அவை ஆர்வங்காட்டின.

அவ்வாறான ஒரு பாரம்பரியத்தின் வழிவந்த ஆடற்கலை வளர்ச்சியில் ஈழத்தவர்களும் கணிசமான பங்களிப்புச் செய்தனர். நாட்டுவாங்க மரபிலும், பயில் நிலையிலும், ஆவணப்படுத்தலிலும் பலர் ஈடுபட்டனர். ஈடுபட்டும் வருகின்றனர் அவ்வாறானதொரு தொடர்வினையில் வெளிப்பாடாகவே திருமதி.சிந்துஜா தர்சன் அவர்களுடைய நாட்டிய அரங்கப் பிரவேசத்தையும் கருத முடிகிறது. இன்று அரங்கப் பிரவேசம் செய்யும் நர்த்தகி அடிப்படையில் கலைகளின் விளைநிலமான இணுவிலில் பிறந்தவர். தனது இளம்பராயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டே ஆடற்கலையில் ஈடுபாடு கெண்ட காரணத்தால் நிருத்திய வேந்தன் திரு.நடராசா குமாரவேள் அவர்களிடம் முறையாகப் பயின்றவர். மேலாக கண்டி பெல்வூட் இசை நடனக் கல்லூரியிலும் நாட்டியம் கற்றவர். இந்த இரு மரபுகளினூடாகப் பரதக் கலையைக் கற்று, இன்று அரங்கம் காணும் நர்த்தகி இக்கலையின் அழிகியலையும், தெய்வீகத்தையும் தொடர்ந்தும் வளர்ப்பதில் முனைப்புக் கொள்ள வேண்டுமென்று வாழ்த்துவதுடன் அவருக்கு அனசரணையாகவிருந்த பெற்றோரையும் துணைவரையும் பாராட்டுகிறேன்.

தாரமும் குருவும் தலைவிதிப் படியே என்ற கூற்றுக்கமைய சிலையை நல்ல குருவாக அமைந்தவர் நிருத்தியவேந்தன் நடராச குமாரவேள். தனது சிறு வயதில் இருந்து பரதக் கலையை இணுவில் வீரமணிஐயரிடம், செல்வி ஞானசௌந்தரி திருஞானசம்பந்தம் பிள்ளையிடமும், தொடர்ந்து கலாகீர்த்தி ஸ்ரீமதி சாந்தினி சிவனேசனிடமும் குருசிய முறையில் பயின்றவர். கோப்பாய் அரசின் ஆசிரிய கலாசாலையிலும் யாழ்பாண பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடத்திலும் நடனக் கலையை முறைசார் கல்வி முறையில் பெற்றவர். இந்த இடையறாத பயிற்சிகளிலும் பட்டங்களும் அவரை முழுமையான கலைஞராக்கியுள்ளன.

மேலாக குமாரநர்த்தனாலயம் என்ற பயிலரங்கை நிறுவி, பல மர்ணவர்களுக்குப் பரதக்கலையைக் கற்றுத் தரும் நிருத்தமாராயராகவும் விளங்குகிறார். யாழ்பாணத்தில் ஆடற்கலையை வளர்த்த ஆடவருள் கலைச்செல்வன், ஏரமசுப்பையா, வீரமணிஐயர் ஆகிய நட்டுவனார்களின் வரிசையில் தம்மையும் இனங்காட்டி வருகிறார். இன்றைய அரங்கப்பிரவேசம் அவரது முதலாவது அரங்ப் பிரவேசமாக அமைகிறது. திரு.குமரவேள் இந்தக் கலைக்கான புதிய தலைமுறையின் அடையாளமாக நிலைபெற வேண்டுமென்று தில்லையம்பல நடராசானின் திருவடி பணிந்து வாழ்த்துகிறேன்.




- பேராசிரியர் **வ.மகேஸ்வரன்**

தலைவர், தமிழ்த்துறை

பேராதனைப் பல்கலைக்கழகம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விசேட விருந்தினர்



**கலைமாமணி தஞ்சை அ.நடராஜன்**
முதல்வர்
தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி
டாக்டர் டி.ஜி.எஸ். தினகரன் சாலை
சென்னை-28.



கலை உலக ரசிகர்களுக்கு !

பாரத நாட்டிற்கே உரிய பரக் கலையாணது இன்றைய கால கட்டத்தில் உலகமெங்கும் பரவியுள்ளதை நாம் அறிந்ததே.

12.07.2015 அன்று தனது பரதநாட்டிய அரங்கேற்றத்தினை ஆற்றவிருக்கும், திருமதி. சிந்துஜா தர்ஷன் அவர்கள் முறையாக பரதநாட்டியத்தினைக் கற்றுத் தேர்ந்து வட இலங்கை சங்கீத சபையினால் நடத்தப்படும் ஆசிரியர் தரத்தினை நிறைவு செய்மு "பரத கலா வித்தகர்" எனும் பட்டம் பெற்றவர்.

இவ்வாறான சிறப்புமிகு ஆடல் கலையினை பலரும் வியக்கத்தகுவண்ணம் நவரசங்களையும், அபிநயங்களையும் நன்றாக தனது நடனத்தில் காட்டி வரும் உயர்மிகு கலைஞரும் ஆவார்.

12.07.2015 அன்று சிவகாமி அம்மன் கோவில் திருமண மண்டபத்தில் நடைபெறும் பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வினை ஆடல் வல்லான் ஸ்ரீமன் நடராஜப் பெருமானின் நல்லாசி பெற்று சிறப்புற அமைய எனது மனமார்ந்த நல்லாசிகள் என்றும் உரித்தாகட்டும்.

பெறுநர்

**திருமதி. சிந்துஜா தர்ஷன்**
யாழ்ப்பாணம்,
இலங்கை.

**கலைமாமணி தஞ்சை அ.நடராஜன்**
முதல்வர்
தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி, சென்னை-28.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வாழ்த்துச் செய்தி



அறுபத்து நான்கு கலைகளில் மிகச் சிறப்பானது ஆடற்கலை இன்று சர்வதேச ரீதியில் பயிலப்பட்டும் பயிற்றப்பட்டும் வரும் இந் நடனக் கலையை உலகுக்கு அறிமுப்படுத்தியவர் திருமதி.ருக்மணி தேவி அருண்டேல் அம்மையார் அவர்கள். இவரது விடா முயற்சியாலும் ஆர்வத்தினாலும் தேவரடியார் வசம் இருந்த பரதக்கலையை பல எதிர்ப்புகளுக்கு முகங்கொடுத்து பொதுமக்களுக்கு உரியதாக்கினார். இவர்தான் திரு.கிருஸ்ணையருடன் இணைந்து பரத நாட்டியக்கலையின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் எனில் மிகையாகாது.

இன்று அரங்கேற்றம் காணும் சிந்துஜா தர்சன் பதினான்கு ஆண்டுகள் பரதக்கலையை முறையாக நிருத்திய வேந்தன் திரு.நடராசா குமரவேள் அவர்களிடம் கற்றுத் தேறியுள்ளார். இணுவையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட குருவும் சிஷ்யையும் அதிர்ஷ்டசாலிகள். சிந்துஜா திரு.திருமதி.சிவசுப்பிரமணியம் அவர்களது ஏக புத்திரியும் தர்சன் அவர்களின் மனைவியுமாவர்.

சிந்துஜா வட இலங்கை சங்கீத சபை நடாத்தி வருகின்ற பரீட்சைகளில் ஆசிரியர் தரப் பரிட்சையில் (பரதம்) 2013 ஆம் ஆண்டு தோற்றி சிறந்த பெறுபேறுகளுடன் சித்தியடைந்து பரத கலா வித்தகர் என்னும் பட்டத்தையும் சுவீகரித்துக் கொண்டார். இவரது கலை வளரவும் இல்லற வாழ்க்கை சிறந்தோங்கவும் எல்லாம் வல்ல ஆனந்தக் கூத்தனை வேண்டி நிற்கின்றேன்.



**கலாபூசணம் நாட்டிய வாரிதி**


**ஸ்ரீமதி.லீலாம்பிகை செல்வராஜா**

அதிபர் கலைக் கோவில் மானிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவின் ஆசியுரை

அம்பலத்தரசன் ஸ்ரீநடராஜப் பெருமானையே முதல்வனாகக் கொண்டு பாரதம் முதல் பார்க்குமிடமெங்கும் பரந்து விரிந்துள்ள ஒரே கலை பரதம் என்றால் மிகையாகாது. இக்கலை நல்லதோர் குருசிஷ்ய மரபையும் கட்டிக்காக்கும் கலையே ஆகும். உள்ளத்தை பண்படுத்தும் தூய்மைப்படுத்தும் சாந்தியும் அமைதியும் கொடுக்கும் பரதக்கலையை ஸ்ரீமதி சிந்துஜா தர்சன் அவர்கள் ஆரம்பம் முதல் என்னிடம் முறைப்படி கற்றுக்கொண்டவர் இவர் தரம் 1-11 வரை யா / இராமநாதன் கல்லூரியிலும் உயர்கல்வியை யா / உடுவில் மகளிர் கல்லூரியிலும் கற்றுக் கொண்டவர். இவர் க.பொ.த. உயர்தரத்திலேயே நடன பாடத்தை ஒரு பாடமாகக் கொண்டு திறமைச் சித்தி பெற்றார். இவர் தனது கல்லூரி வாழ்க்கையிலே தமிழ்த்தினப்போட்டி, பாடசாலை மட்டக்கலை விழாக்கள் ஏனைய வெளி கலை கலாச்சாரப் போட்டிகளிலும் கலந்து தனது திறமையை வெளிக்காட்டும் ஒரு சிறந்த மாணவி அத்தோடு எனது குமரநர்த்தனாலய எந்த விடயங்களிலும். முதல் நின்று செயற்பட கூடிய ஒரு மாணவி. தனது ஆடல் திறமைகளை சகல நிகழ்வுகளிலும் நடன நிகழ்ச்சிகள் மூலம் வெளி கொணர்ந்து பலரது பாராட்டுகளையும் பெற்றவர். வட இலங்கை சங்கீத சபையினால் நடாத்தப்படும் பரதநாட்டிய பரீட்சையில் தரம் 1 - 6 வரை சித்தி பெற்று 2013ஆம் ஆண்டில் பரத கலாவித்தகர், என்ற பட்டத்தினை பெற்றுக்கொண்டவர். இத்தோடு நின்று விடாது பல்கலைக்கழகம் கல்வியற்கல்லூரி அனுமதிகள் கிடைக்கவில்லை என்று மனம் சலிக்காது பரதக்கலையில் வைத்த ஆசையின் நிமித்தம் 2010 - 2013 வரை கண்டி வெல்வூட் இசை நடனக் கல்லூரியில் பரத நாட்டியம் கற்று அதனூடாக இலங்கை அரசாங்கத்தின் தேர்வில் சிங்கள மாணவனுடன் சேர்ந்து அவைக்காற்றுகை நிகழ்வு நடாத்தப்பட்டது. இதன்மூலம் பாராட்டுக்களை பெற்றவர். இவரின் திறமைகளைக் கண்டு இந்தியாவிற்கு கலை கலாச்சார நிகழ்வில் கலந்து கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் அனுப்பிவைத்தமை பாராட்டுக்குரியதாகும். மேலும், உலக இளைஞர்கள் ஒன்று கூடல் ஜப்பான் நாட்டில் நடைபெற்றது. அதில் இலங்கையிலிருந்து பத்துபேர் நேர்முகத் தெரிவின் மூலம் அனுப்பி வைக்கப்பட்டார்கள். அதிலே ஒரே ஒரு தமிழ் பெண்ணாக சிந்துஜா தெரிவு செய்யப்பட்டு "ஜப்பான்" சென்று நாட்டிற்கும் வீட்டிற்கும் பெருமை தேடித்தந்தார். கொழும்பு இளைஞர் விவகார அமைச்சிலே சில மாதங்கள் பரத நாட்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவுரையாளராகவும் தொழிற்பட்டவர். இவருடைய மன துணிவு தான் இப்படி வளர வழி வகுத்தது.

மேலும் இவர் பல தங்க வெள்ளிப் பதக்கங்களையும் பல நாட்டு பரதநாட்டியப் போட்டிகளிலே பங்குபற்றி வெற்றிச் சாதனைகளை படைத்தவர் என்பதில் எமது மன்றத்திற்கும் பெருமை.

அத்தோடு மனப்பலம், பக்குவம், குருபக்தி, கீழ்ப்படிவு, விடாமுயற்சி, தேடல் நிறைந்த இந்தச் சிந்துஜா எனக்கு மாணவியாகக் கிடைத்தமையும் எனக்கு ஒரு வரப் பிரசாதம் என்றே கூற முடியும்.

எனது மன்றத்தினால் முதன்முதலாக அரங்கேற்றப்படும் சிந்துஜா இன்று தனது திருமண பந்தத்திலே இணைந்து ஸ்ரீமதி சிந்துஜா தர்சன் என்ற மங்களகரமான பெயருடன் அரங்கேற்றம் காண்பதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். இவருடைய கணவரும் சிறந்த கலைஞானம் கொண்டவர் இவரை ஈன்ற பெற்றோர் திரு.திருமதி.ஸ்ரீரயனி சிவசுப்பிரமணியம் தம்பதியரும் கலைக்காக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் தமது மகள் நடனத்தில் பெருவிருச்சமாக வேண்டும் என்ற தாயாரின் விடா முயச்சியினை, நான் என் கண் முன்னே கண்டு பெருமிதம் அடைந்திருக்கின்றேன்.

இவர் தர்சனுடன் வாழும் காலத்தில் பரதக்கலையை மேன்மேலும் வளர்த்து தனது 16 செல்வங்களையும் பெற்று, வெளிநாடுகளிலும் இவருடைய பெயர் உயர்ந்தோங்குவதற்கு எனது ஆசிகள். அத்தோடு எனது தனியார் வகுப்புகளுக்கு சனி ஞாயிறு கிழமைகளில் தன்னாலான சேவைகளை புரிந்தவர். நட்டுவாங்கம் செய்யும் திறனையுடம் என் மூலம் கற்றுக் கொண்டவர்.

இவரின் கலைப் பயணத்திற்கு, உறுதுணையாகப் பயணிக்கும் இவரின் பெற்றோர் திரு. திருமதி. சிவசுப்பிரமணியம் ஸ்ரீரயனி அவர்கள், மற்றும் இவரது கணவர் தர்சன் பரதக்கலையின் ஆன்மீக ஆளுமையை உணர்ந்து இணுவில் நடைபெறும் முதல் பரத அரங்கேற்றமாக தமது புதல்வியின் நடன அரங்கேற்றத்தை இணுவில் நடாத்த முன்னெடுத்திருப்பது பாரட்டுக்குரியது. ஸ்ரீமதி சிந்துஜா தர்சனின் இந்த அரங்க பிரவேசம் சிறப்பாக நடைபெற ஆடல் வல்லானின் இறை ஆசி வேண்டிப் பிரார்த்திப்பதோடு இணுவில் பருத்தியான், சிவகாமி, கந்தன் அருள் பெற மேலும் கலைப்பயணம் தொடர்ந்து பல சாதனைகள் காட்டி எனக்கும், எனது மன்றத்திற்கும் பெருமை சேர்க்க இறைவனை நினைந்து ஆசீர்வதிக்கின்றேன்.



**நிருத்திய வேந்தன்**
**திருவாளர் நடராசா குமரவேள்**
அதிபர் இணுவையூர் குமரநர்த்தனாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயுமான என் குரு...

தமிழர்களின் பாரம்பரிய கலைகளில் மேன்மையும் சிறப்பும் பெற்று விளங்குவது தெய்வீகக் கலையாகிய பரத நாட்டியம். "பரதம்" என்பது பாவம், ராகம், தாளம் ஆகியவற்றை தன்னகத்தே கொண்ட நடனமாகும் "பாவம்" என்ற சொல்லிலிருந்து "ப" என்ற எழுத்தையும், "இராகம்" என்ற சொல்லிருந்து "ர" என்ற எழுத்தையும், "தாளம்" என்ற சொல்லிலிருந்து "த" என்ற எழுத்தையும் பிரித்து ஒன்றாகியபோது, பரதம் என்ற சொல் தோன்றியது.

இவ்வாறான புனிதமிக்க பாரம்பரியமிக்க கலையினை ஒரு தேர்ச்சி பெற்ற குருவினூடாக எடுத்துச் செல்லுதல் அழகானது. பண்டைய காலத்தில் கூத்து வடிவிலமைந்த பரதக்கலையானது 18ஆம் நூற்றாண்டின் தஞ்சை பிரகதீஸ்வரர் மரபின் வழிவந்த சின்னையா; பொன்னையா, சிவானந்தம் வடிவேலு சகோதரர்களால் சம்பிரதாய உருப்படியாக்கப்பட்டது. பரத நாட்டியம் வளர்வதற்கும் சீர் பெற்றோங்குவதற்கும் மறுமலர்ச்சி கண்டமைக்கும் ஆண்கலைஞர்களே பெரிதும் பாடு பட்டவர்கள் என்பது மிகையாகாது.



இந்த வழியிலே எனது குரு நடராசா குமரவேள் அவர்கள் நடனத்திற்காகவும், தனது மாணவர்களுக்காகவும் தனது வாழ்க்கையின் பெரும் பகுதிகளை செலவிடுகிறார். நான் வடஇலங்கை சங்கீத சபை நடாத்தும் பரத நாட்டிய பரீட்சையில் தரம் 1 தொடக்கம் தரம் 6 வரை தோற்றி இன்று கலாவித்தகர் ஆக மிளிர்வதற்கு இணுவையூர் குமர நர்த்தனாலய அதிபரும், நிருத்திய வேந்தனும், பொதுக்கலை மாணியும் ஆகிய எனது குரு திருவாளர் நடராசா குமரவேள் அவர்களையே சாரும்.

எனது குருவுடன் 14 வருடங்கள் கலைப் பயணத்தில் செல்கிறேன். வழியில் சீற்றம், அவமரியாதை, கவனம் இன்மை அதட்டுதல் போன்ற தீய குணங்களை கண்டறியேன். மாறாக பொறுமை, தெளிவு, அன்பு, அரவணைப்பு போன்றவற்றிலேயே மாணவர்களை நல்வழிப்படுத்தியவர் மாதா, பிதா, குரு, தெய்வம் வரிசையில் எனது பெற்றோருக்கு அடுத்ததாக இன்னோர் தாய் தந்தைபோல் என்னை அரவணைத்த எனது ஆசானுக்கு நன்றி கூற கடமைபட்டுள்ளேன்.

குரு ப்ரம்மா குரு விஷ்ணு குரு தேவோ மஹேஸ்வரஹ
குரு சாஸ்யாத் பரப்ரம்ம தஸ்மை ஸ்ரீ குருவே நமஹ!!

குருவே பிரமமன், குருவே விஷ்ணு, குருவே மகேஷ்ஸ்வரன் குருவே பரம்பொருள் இவ்வாறான எனது குருவிற்கு கோடான கோடி நமஸ்காரங்கள். பரதக்கலைக்காகவும் தன் மாணவ செல்வங்களுக்காகவும் தன் வாழ்க்கையை அர்ப்பணித்த எமது குரு வாழ்க வளமுடன் என்று இணுவை சிவகாமி அம்மனை பிரார்த்தித்து இன்று பரதநாட்டிய அரங்கேற்றம் காணும் நான் என்றும் எப்போதும் எனது குருவின் ஆசியை வேண்டி நிற்கின்றேன்.

எனது குரு தாயுமானவர்....

நன்றி, என்றும் பணிவுடன் : மாணவி. **ஸ்ரீமதி சிந்துஜா தர்சன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்த்துச் செய்தி**



குமர நர்த்தனாலய அதிபர் திரு.ந.குமரவேள் அவர்களின் மாணவியும், திரு.திருமதி. சிவசுப்பிரமணியம் ஸ்ரீரயனி தம்பதியரின் செல்வப்புதல்வியும் திரு.தர்சனின் மனைவியுமாகிய திருமதி.சிந்துஜா தர்சனின் அரங்கப் பிரவேசத்திற்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.



கலைகள் இன மத மொழி பேதங்களுக்கு அப்பாற்பட்ட தன்மையினால் இக்கலைகள் எங்கள் வாழ்வியல் அம்சங்களுடன் பின்னிப் பிணைந்திருப்பவை. அத்தகைய கலைகளைப் பேணிப்பாதுகாக்க வேண்டியது எங்களது கடமை மட்டுமல்ல, இக்கலைகளை எங்களது அடுத்த பரம்பரையினருக்கு கையளிக்க வேண்டியது எமது பாரிய கடமையாகும். அந்தவகையில் பரதநாட்டியக் கலையானது எமது இந்து மதபண்பாடு கலாசார சடங்குகள் எல்லாவற்றிலுமே இரண்டறக் கலந்திருக்கும் சிறப்பிற்குரியது. என்பதற்கு எடுத்துக் காட்டாக இந்துக்கடவுளரின் ஒவ்வொரு திருமேனியிலும் பொதிந்துள்ள அபிநயத் தோற்றங்களைக் காட்டலாம்.

அந்த வகையில் அமைந்துள்ள பரதக்கலையை குமர நர்த்தனாலய அதிபரும், சிந்துஜாவின் குருவுமான திரு.நடராசா குமரவேள் அவர்களிடம் முறையாகப் பயின்று வட இலங்கை சங்கீதசபை பரீட்சையில் பரத கலாவித்தகர் பட்டம் பெற்றுள்ளார் எனவே அவர் ஆசிரியரின் வழிகாட்டலில் சிறப்புப்பயிற்சி பெற்று அரங்கப்பிரவேசம் காண விரும்புகிறார். அந்த வகையில் கற்பித்த குருவிற்கும், பெற்றோருக்கும், கணவருக்கும், நற்பெயரை பெற்றுக் கொடுக்க எல்லாம் வல்ல இறையருள் கிடைக்க வேண்டி வாழ்த்துகிறேன்.

வாழ்க கலை வளர்க பரதம்

இப்படிக்கு

**கலா கீர்த்தி ஸ்ரீமதி.சாந்தினி சிவநேசன்**

ஓய்வு நிலை விரிவுரையாளர், ஆசிரிய கலாச்சாலை, கோப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச் செய்தி



மனித வாழ்வின் அமைதிக்கும், உற்சாகத்திற்கும், உயர்வுக்கும், உறுதுணையாகத் திகழ்வது கலை கலாச்சார விழுமியங்காளகும், கலைகள் 64 பிரிவுகளாக விரிவு பட்டு வெவ்வேறு ஆர்வத்திற்கும் இரசனைக்கும் எற்ப சிறப்படைகிறது. அதில் பரதம், கீதம் இரண்டும் சேர்ந்து பரிணமிப்பதே பரதக்கலையாகும். இத் தெய்வீக பரத கலையை பேணிப்பாதுகாப்பது நடனக் கலைஞர்களின் பெரும பொறுப்பு.



அந்த வகையில் இணுவையூர் குமர நர்த்தனாலயத்தின் ஸ்தாபகர் நிருத்திய வேந்தன் திருவாளர் நடராசா குமரவேள் அவர்களின் மாணவி திருமதி.சிந்துஜா தர்சன் அவர்கள் நீண்டகால பரதப்பயிற்சியை முறைப்படி தனது குருவிடம் பயின்று இன்று அரங்கேற்றம் காணுவதையிட்டி மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இம்மாணவி வடஇலங்கை சங்கீத சபை நடாத்தும் ஆசிரியர் தரப்பரீட்சையில் கலாவித்தகர் பட்டமும் பெற்றவர். இவரது குரு குமரவேள் வளர்ச்சிப்பாதையை நோக்கிக் கொண்டிருக்கும் ஓர் திறன் கொண்ட ஆசிரியர் அத்தகைய ஆசிரியரின் மாணவி சிந்துஜா தர்சன் அவர்களின் அரங்கேற்றம் சிறப்பாக அமைய வேண்டுமெனவும், குமர நர்த்தனாலயம் மேன்மேலும் வளர்ச்சி அடைந்து பல நடன நட்சத்திரங்களை உருவாக்க வேண்டுமெனவும் எல்லாம் வல்ல தில்லை நடராஜப் பெருமானின் தாழ்பணிந்து வாழ்த்துக்களையும் ஆசிகளையும் வழங்குகிறேன்.

கலாபூசணம்

**ஸ்ரீமதி பத்மினி செல்வேந்திர குமார்**

ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் (யாழ்வலயம்)

கலைக்கோவில், உரும்பிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச் செய்தி



அணுமுதல் அண்டம் வரை இடைவிடாது இயங்கிக்கொண்டிருக்கும் அசைவுகளுக்கும் செயற்பாடுகளுக்கும் இறைவனாகிய அம்பலதரசின் ஆடல்தான் மூலகாரணமாகிறது அந்த ஆடல் வல்லானின் அற்புதநடனத்தை அடிப்படையாக கொண்டு மலர்ந்த அழகு மலர் பரதக்கலையாகும் இத்தகைய பெருமை பெற்ற இக்கலை அழகியலினுடாக ஆன்மீகத்தை நிலைநிறுத்தும் பாங்கு போற்றுதற்குரியது. இக்கலை அபிநயபாவமும், ஆடல்சிறப்பும், தலையப்பபரிமானமும் ஒன்றிணைந்து பரதக்கலையாக வடிவெடுத்து இன்று பார்போற்றும் தெய்வீகக் கலையாக மிளிர்வது இறைவனின் அற்புத செயலே. இந்த அழகுக்கலை அற்புதமானது, அபூர்வமானது, அழகியல் இரசனை மிகுந்தது, ஆன்மீக நிறைவு கொண்டது என்றால் மிகையாகது.



இத்தகைய பெருமை பெற்ற பரதக்கலையை இறைவனுக்கு நிவேதனமாக அர்ப்பணிக்கும் திருமதி.சிந்துஜா தர்சனின் அரங்கப்பிரவேசம் நிறைவான ஒரு கலை அனுபவத்தை எமக்குத்தரும் என்பதில் ஐயமில்லை. இணுவையூர் குமர நர்த்தனாலயத்தின் இயக்குனரான திரு.நடராசா குமரவேள் அவர்களை குருவாகக் கொண்டு தன் கலைப்பயணத்தை ஆரம்பித்து அரங்கேற்றம் வரை பயணித்திருக்கும் சிந்துஜா வடஇலங்கை சங்கீத சபை ஆசிரியர் தரத்தில் சித்தி யெய்தி கலாவித்தகர் பட்டம் பெற்றவர். இவரை உருவாக்கிய குமர நர்த்தனாலயம் தனது 20 ஆண்டு கலைச்சேவையின் பிரதிபலிப்பாக குமரவேள் அவர்களின் நெறியாழ்கையில் பல நடன ஆற்றுகைகளை மேடையேற்றி பாராட்டுகளை பெற்றுள்ளது. அவற்றில் நாட்டிய மயில் விருது கலாவித்தகர் ஆற்றுகைகள் குறிப்பிடத்தக்கது.

இன்றைய அரங்கேற்ற நிகழ்வு குமரநார்த்தனாலயத்தின் முதல் அரங்க பிரவேசமாகும். இந்த அரங்கேற்றத்தில் சங்கமமாகும், சிந்துஜா அவர்களின் கலையுணர்வை உணர்ந்து தகுந்த குருவை இனங்கண்டு பரதக்கலையை கற்பதற்கு வழிகாட்டியது மட்டுமன்றி அரங்கேற்றம் வரை முன்னெடுத்துச் சென்ற பெற்றோரான சிவசுப்பிரமணியம் தம்பதியினரின் கலையுணர்வை பாராட்டுகின்றேன்.

இணுவையூரில் குமரவேள் அவர்களைக் குருவாகக் கொண்டு நடன மாணவர்களுக்கு சேவையாற்றிவரும் நர்த்தனாலயம் மேலும் பல நடன ஆற்றுகைளை படைக்க வாழ்த்துகின்றேன். இன்றைய அரங்கேற்ற நிகழ்வு சிறப்புற சிந்துஜா நடன உலகில் மேலோங்க பல சாதனைகளில் வெற்றி பெற எல்லாம் வல்ல ஆடற் கூத்தனின் அருள் வேண்டி ஆசிக்கின்றேன்.

நாட்டியக்கலைமணி

**ஸ்ரீமதி யசோதரா விவேகானந்தன்**

அதிபர், திலக நர்த்தனாலயம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நயமுடனே நவில்கின்றோம் கோடி நன்றிகள்...



எமது புத்திரி ஸ்ரீமதி சிந்துஜா தர்சனின் அரங்கேற்ற நிகழ்விற்கு கால்கோளமாகவிருந்த அவரின் குரு திருவாளர் நடராசா குமரவேள் அவர்களுக்கும், அரங்க பூஜை, சலங்கை பூஜை செய்த குரு முதல்வருக்கும், மாண்புமிகு பிரதமவிருந்தினர், சிறப்பு விருந்தினர், விசேட விருந்தினர், கௌர விருந்தினர்கள், அருளாட்சி வழங்கிய கலைஞர்கள் அரங்க நிகழ்விற்கு தோளோடு தோள் நின்று பாடுபட்ட அரங்க கலைஞர் பெருமக்கள் வருகைதந்து சிறப்பித்த கல்விமான்கள், கலைஞர்கள் அறிவுசார் பெரியார்கள், நண்பர்கள், உறவினர்கள், குமரநர்த்தனாலய மாணவர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் திருவாளர் குமரவேள் அவர்களின் பாரியார் டிலானி குமரவேள் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை காணிக்கையாக்குகின்றோம்.

வீடியோ, புகைப்பட வல்லுநர்கள் ஆடையலங்காரம், ஒப்பனை, ஒளி, ஒலி, அமைப்பாளர்கள் வடிவமைப்பு, அழைப்பிதழ், அரங்க நிகழ்ச்சி மலரினை சிறப்புடன் அச்சில் பதித்த பதிப்பகத்திற்கும், இணுவில் சிவகாமி அம்மன் மண்டபத்தை தந்துதவிய நிர்வாகத்திற்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

சிந்துஜாவின் கலையார்ப்பணமாம் அரங்கப் பிரவேச நிகழ்விற்கு முன்னின்று உதவியவர்களுக்கும் இலைமறை காயாய் நின்றுதவிய உள்ளங்களுக்கும் நன்றிகள் பல கூற கடமைப்பட்டுள்ளோம். மேலும் எம்மை எல்லாம் வழி நடத்திக் கொண்டிருக்கும்இணுவில் சிவகாமி அம்மன், பருத்தியான், தில்லை நடராஜனின் ஆசியையும் வேண்டி நிற்கின்றோம், மேலும் அமரத்துவமடைந்த சிந்துஜாவின் தகப்பனார், பெரிய தகப்பனார் மற்றும் பேரனாரின் ஆசியையும் வேண்டி நிற்கின்றோம்.

"நன்றி மறப்பது நன்றன்று" என்ற திருவள்ளுவரின் கூற்றிற்கிணங்க எமது நன்றிகைள உங்களுக்கெல்லாம் பணிவுடன் சமர்ப்பிக்கின்றோம்.

பணிவான நன்றிகளுடன்

**தாய் திருமதி ஸ்ரீரயனி**

**கணவர் திரு. தர்சன்**

மற்றும் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிப்பாளர்கள் : இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா,
உதவிபதிவாளர், மருத்துவபீடம்,
யாழ்பல் கலைகழகம்,
ஞானானந்தன்
ஞானலோயன் (இணுவில்)

ஒளி அமைப்பு : இரத்தினம் மனோகரன்,
மனோ லைஷ், கோப்பாய்

ஒலி அமைப்பு : பி.குமரன் நல்லூர்,
யாழ்பாணம்

ஒப்பனை : அனிதா தர்மராஜா,
**Dream Style Beauty Parlor,**
மல்லகாம்

உடை அமைப்பு : ஸ்ரீரயனி (இணுவில்)
**Renuka Tailors**
சென்னை



புகைப்படம் : **Rex Studio,**
நரசிம்மார் கோவிலடி,
யாழ்ப்பாணம்

வீடியோ : க.ஜெயேந்திரன்,
ஜெயா வீடியோ,
இணுவில்

அரங்க அமைப்பு : நண்பர்கள்

அரங்கேற்ற
அழைப்பிதழ் புத்தகம் : **RELIANCE CARDS,**
20, Andreson Street,
Chennai - 01. Tamil Nadu,
India.
**Ph : +91 75982 66853**
**+91 44 4206 6853**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org